மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.09.2024), சென்னை, தேனாம்பேட்டை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககத்தில் உள்ள மாநில பொது சுகாதார ஆய்வகத்தில், இன்னும் 3 நாட்களில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ள டெங்கு மரபணு பகுப்பாய்வகத்தை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சம்பத், இணை இயக்குநர் துணை இயக்குநர் மரு.ராஜு ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம். பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு எம்.சி. தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி முன்னிலையில் நடைபெற்றது. சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், நா. துலுக்காணம், அ. கோவிந்தன், எஸ்.வெங்கடேசன், எம்.தமீம், டி.பொல்லு (எ) சுரேஷ் குமார், வி.கே.வெங்கடேசன், எஸ். தமிழ்செல்வி,எம்சி., த.கருணாநிதி, பி.சுகுமார், வனஜா சண்முகம், எம்.பெரோஸ்கான், இரா. வீரமணி, க. ராஜ்முகமது, கனல் கங்கா, ஈஸ்வரி கண்ணன் மற்றும் நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர். 76வது வட்ட செயலாளர், எஸ்.சசிகுமார் நன்றி கூறினார்.

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மீதான வழக்கு:

மறு விசாரணைக்குத் தடை: உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு!

புதுடெல்லி, செப்.07- வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்ந்ததாக புனையப்பட்ட வழக்கில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தென்னரசு ஆகியோர் விசாரணையை சந்திக்க வேண்டும் என உத்தரவிட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்ந்ததாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து தமிழக வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில், சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தியது. இருவரும் விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவிட்டிருந்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து அமைச்சர்கள் இருவரும் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அமைச்சர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் ஹிருஷிகேஷ் ராய், பிகே மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த விவகாரம் குறித்து பதிலளிக்க தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

முன்னதாக, அமைச்சர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், அபிஷேக் சிங்வி ஆகியோர் விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களின் வழக்குகளை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட நடைமுறை சரியல்ல என வாதிட்டனர்.

இதையடுத்து, அமைச்சர்கள் மீதான விசாரணைக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் இடைக்கால தடை விதித்தனர். மேலும், இந்த வழக்கு மீதான விசாரணையை நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.

பெ.ராஜீ தலைமை! துரை கபிலன் - எம்.விநாயகமூர்த்தி - எம்.ராதிகா எம்.சி. - சி.சுரேஷ் முன்னிலை!

வேளச்சேரி கிழக்கு - 174 வது வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - பாலவாக்கம் த.விஸ்வநாதன் சிறப்புரை!

சென்னை, செப். 7 - சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி, 174 வது வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (07.09.2024 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, அடையார், வண்ணந்துறை, எல்லையம்மன் கோயில் தெருவில் நடைபெறுகிறது.

174 வது வட்டக் கழகச் செயலாளர் பெ.ராஜீ தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் துரை கபிலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, 174 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ராதிகா, சி.சுரேஷ், அ.ரவிகிருஷ்ணன், பி.எஸ்.பாஸ்கர், த.செல்வம், கி.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நா.அசோகன், விஜயா ராமதாஸ், ஆர்.விகாஷ், கா.வி னோத்குமார், கோ.செல்வகுமார், இரா.சுரேஷ், மார்க் ஆனந்த், சரவணன், கக்கன் காலனி சக்தி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி தொகுதிப் பார்வையாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், வாசுகி பாண்டியன், வே.ஆனந்தம், சி.பரிமேலழகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் அருணா வேலாயுதம், ஆ.ச.ஸ்ரீகாந்த், எல்.சந்தானம், கே.இசட்.வனஜா மற்றும் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

174 வது வட்டக் கழக துணைச் செயலாளர் பா.சின்னதம்பி நன்றி கூறுகிறார்.

இவ்வாறு 174 வது வட்டக் கழகச் செயலாளர் பெ.ராஜீ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

131வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, செப்.7- சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131-வது வட்டத்தில் வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வேண்டுகோளை ஏற்று, சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோரது அறிவுறுத்தலின்படி, 131-வது வட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில், மாமன்ற உறுப்பினர் திருமதி.கோமதி மணிவண்ணன், பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன், வட்ட அவைத் தலைவர் வை.தமிழ்செல்வன், முன்னிலையில் நாளை (8.9.2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி, 4வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

ஆகையால் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். கும்முடிப்பூண்டி தொகுதி. கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன் வரவேற்புரையில் ஒன்றிய அவைத் தலைவர் கு.ஜோதிலிங்கம் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் ஜி.திருஞானம், எம்.உதய காந்தம்மாள், எம்.கே.ஏசுரத்தினம், கே.பரத்குமார், ஆர்.ஜெயபிரகாசம், மு.முனிவேல் பா.முத்துசாமி முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முப்பெரும் விழா, பொற்கிழி வழங்குதல், முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை மற்றும் 2026 தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

கழகத் தீர்மானக் குழுச் செயலாளர்

அக்ரி கணேசன் - பா. பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்ல திருமண விழா!

அமைச்சர் பெருமக்கள் - எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் - அரசு அதிகாரிகள் - கழக முன்னணியினர் பங்கேற்பு!

மதுரை, செப் 7- கழகத் தீர்மானக் குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு தலைவருமான அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை இயக்குனருமான பா.பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் வரும் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது, அதன் விபரம்

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பின ருமான மறைந்த பால்சாமி அவர்கள் பேத்தியும், கழக மாநில தீர்மானக்குழு செயலாளர், அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும்,

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குனர் பா.பொன்னையா ஐ.ஏ.எஸ்., இ.சிநேகலதா தம்பதியினரின் மகள் பா.சௌதாமினி எம்.பி.பி.எஸ்., புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா.பாலசண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் காலை 8.45 மணிக்கு மேல் 9.55 மணிக்குள் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து 10.09.2024 ஆம் தேதி மாலை 06.30 மணிக்கு சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஐடிசி கிராண்ட் சோலா ஹோட்டல் ராஜேந்திரன் அரங்கத்தில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அதேபோல் மதுரையில் வரும் 13.09.2024ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மேல் 3மணிக்குள் பா. சௌதாமினி, ரா.பாலசண்முகம் தம்பதியரின் வரவேற்பு நிகழ்ச்சிகள் மதுரை தூத்துக்குடி சாலையில் உள்ள வேலம்மாள் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஜடா ஸ்கட்டர் அரங்கம் 1ல் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள், அதிகாரி பெருமக்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொழிலதிபர்கள், கழகத்தினர், உறவினர்கள், பொது மக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம் மாநகரம் 3 வது பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் அ.தசரதன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.7 காஞ்சிபுரம் மாநகரம் 3வது பகுதிக் கழகச் செயலாளர் அ.தசரதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம் 3வது பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் (9.9.2024 - திங்கட்கிழமை) அன்று பிற்பகல் 12.00 மணிக்கு காஞ்சிபுரம், (ரங்கசாமி குளம் அருகில்) விளக்குடி கோயில் தெருவில் அமைந்துள்ள சாலம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதிக் கழக அவைத் தலைவர் ஆ.மோகனவேல் தலைமை வகிக்கிறார். வ.மலர்மன்னன், சி.விமல்தாஸ், எஸ்.சுமித்ரா, கே.செல்வம், கே.ராதாகிருஷ்ணன், சி.தங்கபாண்டியன், ஆ.இப்ராகிம் ஷெரிப், என்.சங்கர், எம்.எஸ்.பி.பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

மேலும் மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., மாணவரணி மாநிலச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.ஏ.செங்குட்டுவன். ஏ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்புராயன், கே.திலகர், எஸ்.சந்துரு, சு.வெங்கடேசன், அ.யுவராஜ், ப.சங்கர், தி.அன்பழகன், ஜி.சுகுமாரன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பெ.சுந்தரவரதன், சாந்தி சீனிவாசன், ஜி.சசிக்கலா, எஸ்.மோகன், த.விஸ்வநாதன், ப.சுரேஷ், அ.பாலமுருகன், எஸ்.மாமல்லன், எஸ்.சுகுமார், எஸ்.ரவிக்குமார், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், நாத்திகம் நாகராசன், கே.ஏ.இளங்கோவன், கே.செல்வி, டி.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், பி.எஸ்.ரமேஷ், எஸ்.தாஸ், எஸ்.டில்லிபாபு, அ.சாவணன், தி.ஸ்ரீதர், மு.ஓவியக்கண்ணன், மா.வெங்கடேசன், பி.கே.பெருமாள், டி.ரவி, எஸ்.பால், இ.கெங்காதான், மு.ரமேஷ். வெ.அன்பழகன், கா.கலையரசன், டி.பிரபாகரன், ம.சந்திரசேகர், வ.சேகர், மு.சங்கர், வி.தணிகைவேல், சோபனா கண்ணன், ரமணி பொன்னம்பலம், ஆர்.கார்த்திக், பூங்கொடி தசரதன் உள்பட மாநகர அணிகளின் நிர்வாகிகள், 3வது பகுதிக் கழகப் பிரதிநிதிகள் உள்பட கழக முன்னணியினர் தோழர்கள் சுலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

33 வது வட்டக் கழகச் செயலாளர் ரவிச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் பகுதிச் செயலாளர் அதசரதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ.- - ஜி.துக்காராம் - - எஸ்.நந்தகோபால் சிறப்புரை!

மாதவரம் தெற்குப் பகுதி 24 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் அறிவிப்பு!

சென்னை, செப். 7 - சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி, 24 வது வட்டக் கழகத்தினருக்கு வட்டக் கழக செயலாளர் கே.பி.சுந்தரேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம் , மாதவரம் தெற்குப் பகுதி 24 ஆவது வட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (8.9.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி அளவில் புழல் புனித அந்தோணியார் கோயில் மெயின் தெருவில் அமைந்துள்ள வியாபாரிகள் சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் சி.ஜே.ரவி தலைமை வகிக்கிறார்.

வட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., மாதவரம் தெற்கு பகுதிச் செயலாளர் ஜி.துக்காராம், மாதவரம் மண்டலக் குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக் கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் நிர்வாகிகள், பாக முகவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, இளைஞரணி தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் கே.பி.சுந்தரேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டுதாஸ்புரத்தில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வழங்கப்பட்ட 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய மழைநீர் வடிகால் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.